**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பழங்குடியினர் நலம் - பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளை உருவாக்கி பழங்குடியின மாணாக்கரின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் - சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கொம்புதூக்கி, குறவன்காடு கிராமத்தில் இயங்கி வரும் மாண்ட்போர்ட் பழங்குடியின சமுதாயப் பள்ளிக்கு 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான கல்வி. உணவு மற்றும் இதர மானியத் தொகை ரூ.1,79,27,990/- - நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(1)] துறை**

அரசாணை (நிலை) எண்.03

நாள்: 21.01.2022
பிலவ வருடம், தை 08,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.87, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [பமே1(1)] துறை, நாள் 06.08.2019.
2. இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.பமே/ஈ2/5099/2022, நாள் 03.12.2021.

*******

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளை உருவாக்கி பழங்குடியின மாணாக்கரின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது.

2. மேலே இரண்டவதாகப் படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கொம்புதூக்கி குறவன்காடு கிராமத்தில் இயங்கி வரும் மாண்ட்போர்ட் சமுதாய ஆரம்பப் பள்ளி 2002 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளி 2007ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியாக

..2..

தரம் உயர்த்தப்பட்டு, 2008 ஆம் ஆண்டு மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப்பள்ளியில் தற்போது 840 மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் உள்ள விடுதிகளில் 233 மாணாக்கர் தங்கி பயின்று வருகின்றனர். பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளை உருவாக்கி பழங்குடியின மாணாக்கரின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், நிதி உதவி வழங்கிட மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்கள், சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கொம்புதூக்கி குறவன்காடு கிராமத்தில் இயங்கி வரும் மாண்ட்போர்ட் சமுதாய மேல்நிலைப்பள்ளியில் 2021-2022 ஆம் கல்வி ஆண்டில் பயின்று வரும் 840 மாணாக்கருக்கு கல்வி மானியமாக ரூ.1,93,27,200/-ம் மற்றும் விடுதியில் தங்கி பயிலும் 233 மாணாக்கருக்கு செப்டம்பர் 2021 முதல் மார்ச் வரையிலான (7 மாதங்கள்) விடுதிக் கட்டண மானியமாக (உணவுக் கட்டணம், இதர செலவினம் உட்பட) ரூ.18,09,730/-ம், ஆக மொத்தம் ரூ.2,11,46,930/- (ரூபாய் இரண்டு கோடியே பதினோறு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது மட்டும்) மானியம் வேண்டி கருத்துரு அனுப்பியுள்ளதாகவும், மாவட்ட குழுக்கூட்ட நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்:-

(i) ஏற்காடு வட்டம், கொம்புதூக்கி மாண்ட்போர்ட் சமுதாய மேல்நிலைப்பள்ளியில் 2021-2022 ஆம் கல்வி ஆண்டிற்கு 840 மாணாக்கருக்கு ரூ.1,93,27,200/- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று மூன்று இட்சத்து இருபத்தேழாயிரத்து இருநூறு மட்டும்) கல்வி மானியக் கருத்துருவினை பரிசீலனை செய்து அரசுக்கு அனுப்பும் பொருட்டு சென்னை பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு கடித வரைவு அனுப்ப மாவட்ட குழுவால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(ii) மேலும் 2021-2022 ஆம் கல்வி ஆண்டில் விடுதியில் தங்கி பயின்று வரும் 233 மாணாக்கருக்கான (உணவுக் கட்டணம் + இதர செலவினம் உட்பட) விடுதிக்கட்டண மானியமாக ரூ.26,60,534/- கோரப்பட்டுள்ள கருத்துருவினை பரிசீலனை செய்து (செப்டம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை உள்ள 7 மாதங்களுக்கு மட்டும்) ரூ.18,09,730 ஆக மொத்தம் ரூ.2,11,36,930/- (ரூபாய் இரண்டு கோடியே பதினோறு இலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது மட்டும்) மானியம் வேண்டி அரசுக்கு அனுப்பும் பொருட்டு சென்னை பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு கடித வரைவு அனுப்ப மாவட்ட குழுவால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

-3-

(iii) அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இப்பள்ளியில் பயிலும் மாணாக்கருக்கு அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு வழங்கப்படுவதுபோல் விலையில்லா கல்வி உபகரணங்களான மடிக்கணிணி, பாடப்புத்தங்கள், எழுதுபொருட்கள், காலணிகள், புத்தகப்பைகள், மழைஅங்கி, ஸ்வெட்டர் ஆகியவை வழங்க முதன்மை கல்வி அலுவலருக்கு கடித வரைவு அனுப்ப மாவட்ட குழுவால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(iv) மேலும் விடுதியில் தங்காத மாணாக்கருக்கு தினமும் மதிய உணவு (புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ்) சத்துணவு மற்றும் அரசின் மானியத்துடன் வழங்கப்படும் ரூ.1க்கான அரிசி வழங்கும் கருத்துருவினை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) சேலம் மாவட்ட நுகர்வோர் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலருக்கு கடித வரைவு அனுப்ப மாவட்ட குழுவால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. பழங்குடியினர் நல இயக்குநர் தனது கடிதத்தில், 2021-2022 ஆம் ஆண்டு மாண்ட்போர்ட் பழங்குடியினர் சமுதாயப் பள்ளி மாணாக்கர் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் கல்வி பயில்கின்றனர் என்றும்:

| வகுப்பு | மாணாக்கர் | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| UKG | 16 | 22 | 38 |
| 1 | 23 | 27 | 50 |
| 2 | 38 | 32 | 70 |
| 3 | 27 | 19 | 46 |
| 4 | 35 | 25 | 60 |
| 5 | 32 | 20 | 52 |
| 6 | 51 | 31 | 82 |
| 7 | 35 | 19 | 54 |
| 8 | 49 | 31 | 80 |
| 9 | 52 | 38 | 90 |
| 10 | 50 | 27 | 77 |
| 11 | 48 | 37 | 85 |
| 12 | 24 | 32 | 56 |
| மொத்தம் | 480 | 360 | 840 |

**(i) கல்வி மானியம்**

| வ. எண் | வகுப்பு | மாணாக்கர் எண்ணிக்கை | ஒரு மாணாக்கருக்கு ஒரு மாதத்திற்கான மானியம் (ரூபாயில்) | ஒரு மாதத்திற் கான மானியம் (ரூபாயில்) | மாணாக்கருக்கு ஆண்டொன்றுக்கு அரசு வழங்கும் மானியம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1. | UKG | 38 | 1570 | 59,660 | 7,15,920 |
| 2. | ஆரம்பப்பள்ளி | 278 | 1570 | 4,36,460 | 52,37,520 |
| 3. | நடுநிலைப்பள்ளி | 216 | 1880 | 4,06,080 | 48,72,960 |
| 4, | உயர்நிலைப்பள்ளி | 167 | 2300 | 3,84,100 | 46,09,200 |
| 5 | மேல்நிலைப்பள்ளி | 141 | 2300 | 3,24,300 | 38,91,600 |
| | **மொத்தம்** | **840** | - | **16,10,600** | **1,93,27,200** |

2021-2022 ஆம் கல்வியாண்டில், தற்பொழுது விடுதியில் தங்கியுள்ள 233 மாணாக்கருக்கான உணவு மற்றும் இதர செலவின மானியமாக ரூ.26,60,534/- கோரப்பட்டுள்ளது என்றும், இக்கருத்துருவினை பரிசீலனை செய்து செப்டம்பர் 2021 முதல் மார்ச் 2022 வரை எஞ்சிய 7 மாதங்களுக்கு ரூ.18,09,730/- ஆக மொத்தம் **ரூ.2,11,46,930/-** மானியம் வேண்டி மாவட்ட குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கருத்துரு வரப்பெற்றுள்ளது என்றும்,

**(ii) உணவு கட்டணம்**

| வ. எண். | விடுதி மாணாக்கரின் எண்ணிக்கை | உணவு கட்டணம் /இதர செலவு | மாதங்கள் | ஒரு மாதத்திற்கு | மொத்த தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1. | 233 மாணாக்கர் | 900 (கொரனா தொற்று நோய் காரணமாக தமிழகத்தில் ஊரடங்கின் காரணமாக நடப்பு கல்வி ஆண்டில் செப்டம்பர் முதல் மார்ச்வரை உணவு | 7 | 900 | 14,67,900 |
| 2. | 233 மாணாக்கர் அரசு ஆணை (நிலை) எண்.29 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4) துறை நாள்.02.05.2018-ன்படி) | இதர செலவினம் (குளியல் சோப், துணிசோப்,தேங்காய் எண்ணெய், பேஸ்ட், பவுடர் , சாம்பு) (அகராதி, அட்லஸ், சீருடை கோரைப்பாய், போர்வை) ரூ. 1518.60 X 233 =3,53,833.8 | - | 1518.60 | 3,53,834 |
| | | **மொத்தம்** | - | - | **18,21,734** |

மேற்கண்ட சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்யப்பட்ட கருத்துருவினை கீழ்கண்டவாறு வரையறை (Restricted) செய்து அரசிற்கு பரிந்துரைக்கப்படுவதாகவும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின், வழிகாட்டு நெறிமுறைகளில் பத்தி 5.5-இல், தெரிவித்தவாறும் மற்றும் கல்வி உரிமைச் சட்டம்-2009-இன்படி மாணாக்கரின் எண்ணிக்கை அடிப்படையில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களை விகிதாச்சாரம் முறையில் நிர்ணையம் செய்து இப்பள்ளிக்கான கல்வி மானியத் தொகை மற்றும் விடுதியில் மேற்கொள்ளப்படும் உணவு மற்றும் இதரச் செலவின மானியம் மதிப்பீடு செய்து அதன்படி மாண்ட்போர்ட் சமுதாய துவக்கப் பள்ளியில் 278 மாணாக்கரும், மேல்நிலைப்பள்ளியில் 524 மாணாக்கரும் பயின்று வருகின்றனர்;

**<u>கல்வி மானியம்</u>**

| வ. எண் | வகுப்பு | மாணாக்கரின் எண்ணிக்கை | ஒரு மாணாக்கருக்கு ஒரு மாதத்திற்கான மானியம் (ரூபாயில்) | ஒரு மாதத்திற்கான மானியம் (ரூபாயில்) | மாணாக்கருக்கு ஆண்டொன்றுக்கு அரசு வழங்கும் மானியம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1. | ஆரம்பப்பள்ளி | 278 | 1254 | 3,48,612 | 41,83,344 |
| 2. | மேல்நிலைப்பள்ளி | 524 | 1899 | 9,95,076 | 1,19,40,912 |
| | **மொத்தம்** | **802** | **-** | **13,43,688** | **1,61,24,256** |

**<u>மாண்ட்போர்ட் சமுதாய துவக்கப் பள்ளி - 278 மாணாக்கர்</u>**

| S.No | Details | Nos. | Salary (Rs.) | Salary Total (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | Head Master | 1 | 36200 | 36200 |
| 2 | Secondary Grade Assistant | 9 | 20600 | 185400 |
| 3 | Physical Education Teacher | 1 | 20600 | 20600 |
| 4 | Warden | 1 | 35900 | 35900 |
| 5 | Office Assistant | 1 | 15700 | 15700 |
| 6 | Watchman | 1 | 15700 | 15700 |
| 7 | Cook | 2 | 15700 | 31400 |
| 8 | Sweeper | 1 | 7700 | 7700 |
| | **Total (per month)** | **17** | **168100** | **348600** |

**மாண்ட்போர்ட் சமுதாய மேல்நிலைப் பள்ளி - 524 மாணாக்கர்**

| S.No | Details | Nos. | Salary (Rs.) | Salary Total (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | Head Master | 1 | 56900 | 56900 |
| 2 | PG Assistant | 9 | 36900 | 332100 |
| 3 | BT Assistant | 10 | 36400 | 364000 |
| 4 | Physical Education Teacher | 2 | 20600 | 41200 |
| 5 | Warden | 2 | 35900 | 71800 |
| 6 | Junior Assistant | 1 | 19500 | 19500 |
| 7 | Record Clerk | 1 | 15700 | 15700 |
| 8 | Office Assistant | 1 | 15700 | 15700 |
| 9 | Watchman | 2 | 15700 | 31400 |
| 10 | Cook | 2 | 15700 | 31400 |
| 11 | Sweeper | 2 | 7700 | 15400 |
| | **Total (per month)** | **33** | **276700** | **995100** |

## உணவு மற்றும் இதர செலவின மானியம்

**விடுதி மாணாக்கர் எண்ணிக்கை விவரம்**

| வகுப்பு | மாணாக்கர் | | மொத்தம் | பள்ளி திறக்கப்பட்ட மாதம் |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | | |
| 1-5 | 2 | 2 | 04 | 01.11.2021 முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. |
| 6 | 3 | 0 | 03 | |
| 7 | 3 | 0 | 03 | |
| 8 | 0 | 0 | 0 | |
| 9 | 1 | 4 | 5 | 01.09.2021 முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. |
| 10 | 50 | 27 | 77 | |
| 11 | 48 | 37 | 85 | |
| 12 | 24 | 32 | 56 | |
| TOTAL | 131 | 102 | 233 | |

**துவக்கப்பள்ளி விடுதி உணவு கட்டணம்**

| வகுப்பு | மாணாக்கர் எண்ணிக்கை | உணவு கட்டணம் | மாதங்கள் | மொத்தம் | பள்ளி திறக்கப்பட்ட மாதம் |
|---|---|---|---|---|---|
| 1-5 | 04 | ரூ.900 | 05 (நவம்பர் முதல் மார்ச்வரை) 10x05x900 = 45.000 | 45,000 | 01.11.2021 முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. |
| 6 | 03 | | | | |
| 7 | 03 | | | | |
| 8 | 0 | | | | |
| மொத்தம் | 10 | | | 45,000 | |

**மேல்நிலைப்பள்ளி விடுதி உணவு கட்டணம்**

| வகுப்பு | மாணாக்கர் எண்ணிக்கை | உணவு கட்டணம் | மாதங்கள் | மொத்தம் (ரூபாய்) | பள்ளி திறக்கப்பட்ட மாதம் |
|---|---|---|---|---|---|
| 9 | 5 | ரூ.900 | 07 (செப்டம்பர் முதல் மார்ச் வரை) 223x07 x900 =14,04,900 | 14,04,900 | 01.09.2021 முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. |
| 10 | 77 | | | | |
| 11 | 85 | | | | |
| 12 | 56 | | | | |
| மொத்தம் | 223 | - | - | 14,04,900 | |

**இதர கட்டணம்**

| மொத்த மாணாக்கர் | இதர கட்டணம் | மொத்த மாணாக்கர் x இதர கட்டணம் | மொத்தம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 233 | ரூ.1518.60 | 233 x ரூ.1518.60 = 3.53.833.8 | 3,53,834 |
| மொத்தம் | | | 3,53,834 |

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின், வழிகாட்டு நெறிமுறைகளில் பத்தி எண்.5-இல் (5.2), 3 கிலோமீட்டர் தொலைவிற்கு அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகள் ஏதும் இருக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இப்பள்ளிக்கு 3 கி.மீ. தொலைவிற்குள் கொம்புத்தூக்கி அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட துவக்கப்பள்ளி உள்ளது என்று சேலம் மாவட்ட திட்ட அலுவலர் தெரிவித்துள்ளார்.

4. பழங்குடியினர் நல இயக்குநர் தனது கடிதத்தில் 2021-2022, நிதி ஆண்டிற்கு மாண்ட்போர்டு சமுதாய ஆரம்பப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 802 மாணாக்கருக்கு கல்வி மானியத் தொகையாக **ரூ.1,61,24,256/-** மற்றும் விடுதியில் தங்கி பயிலும் 233 பழங்குடியினர் மாணாக்கருக்கு உணவு மற்றம் இதர செலவின மானியமாக ரூ.18,03,734/- ஆக மொத்த மானியத் தொகையாக ரூ.1,79,27,990/-ஐ (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தொன்பது இலட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மட்டும்) மாண்ட்போர்ட் தொண்டு நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்குமாறு அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

..8..

5. மேற்காணும் பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகளை உருவாக்கி பழங்குடியின மாணாக்கரின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், மேலே படிக்கப்பட்ட அரசாணையின் வழிகாட்டு நெறிமுறைகளில், பத்தி எண்.5.2-ஐ, இத்தொண்டு நிறுவனம் பொருட்டு மட்டும் தளர்வு செய்து, சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், கொம்புதூக்கி, குறவன்காடு கிராமத்தில் இயங்கி வரும் மாண்ட்போர்ட் பழங்குடியின சமுதாய பள்ளிக்கு, 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான கல்வி, உணவு மற்றும் இதர செலவின மானியத் தொகையாக ரூ.1,79,27,990/-க்கு (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து ஒன்பது இலட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 - பழங்குடியினர் நலன் - 277 – கல்வி – மாநில செலவினங்கள் - KC– பழங்குடியினர் மாணவர்களுக்கு உணவு வழங்கும் மானியம் - 309 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
>
> (IFHRMS DPC: 2225-02-277-KC-30903)
> (Old DPC: 2225-02-277-KC-0933)"

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று மாண்ட்போர்ட் அரசு சாரா தொண்டு நிறுவனத்திற்கு வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மானியத்தை காலாண்டு அடிப்படையில் திட்ட அலுவலர் அவர்களுக்கு விடுவித்திட பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [கமபா] துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.2907/ஆதி(ம)பந/2022, நாள் 20.01.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது

//ஆளுநரின் ஆணைப்படி//

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்.
திட்ட அலுலவர், சேலம்.
நிர்வாக அறங்காவலர், மாண்ட்போர்ட் சமுதாயப்பள்ளி, குறவன்காடு கிராமம்,
கொம்புதூக்கி, ஏற்காடு – 636 601, சேலம் மாவட்டம்.
மாநிலக்கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18/6/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 8.
நகல்
நிதி [ஆதி(ம)பந] துறை, சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி(ம)பந (ஆதிந 5/கமபா/ஆதிந2/அநமு) துறை, சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜா. தங்கம்
21.1.2022
பிரிவு அலுவலர்